பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

Registered as a Newspaper

சுடர் : 40
கதிர் : 178

சனிக்கிழமை
24 மே 2025

வைகாசி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## புலிகளின் கொள்கைகள் தோற்கவில்லை!

நாமல் தெரிவிப்பு

கொழும்பு, மே 24
தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு கருத்தியல் ரீதியில் இன்னும் தோற்கடிக்கப்படவில்லை. 11

வடக்கு - கிழக்கில் உள்ள

# காணிகளைக் கையகப்படுத்த இம்மியளவும் எண்ணமில்லை!



அரசியற்கட்சிகளுடனான சந்திப்பில் பிரதமர் ஹரிணி திட்டவட்டம்

கொழும்பு, மே 24

வடக்கு - கிழக்கில் உள்ள பொதுமக்களின் நிலங்களை கையகப்படுத்தும் எந்த எண்ணமும் அரசாங்கத்துக்கு இல்லை. எனவே, பொதுமக்களும், அவர்களின் பிரதிநிதிகளான அரசியற் தலைவர்களும் பதற்றமடைய வேண்டியதில்லை - இவ்வாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். 11



## வவுனியாவில் வீடொன்றில் துப்பாக்கி ரவைகள் மீட்பு!

அதிரடிப்படைச் சிப்பாய் கைது சீருடைகளும் சிக்கின

வவுனியா. மே 24
வவுனியா - போகஸ்வெவ சலினிகம கிராமத்தில் உள்ள வீடொன்றில் இருந்து ஏராளமான துப்பாக்கி ரவைகள், ஆயுதங்கள் மற்றும் அதிரடிப்படையின் சீருடைகள் என்பன 11

## அரசகடமைக்கு இடையூறு சுமண ரத்ன தேரர் கைது!

பின்னர் கிட்டியது பிணை



கொழும்பு, மே 24
அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
அம்பாறை உஹன பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் 11

## கனடாவின் ஆதரவை இறுகப்பற்றுகிறோம்!

ரவிகரன் எம்.பி. உருக்கம்

கொழும்பு, மே 24
கனடாவின் ஆதரவை ஈழத்தமிழர்கள் அனைவரும் இறுகப்பற்றிக்கொள்கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:- 11



## போதைமாத்திரைகள்; 2 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், மே 24
போதைமாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது 11



## தெற்காசியாவுக்குள் மீண்டும் கொரோனா

கொழும்பு, மே 24
தெற்காசிய நாடுகளில் மீண்டும் கொரோனாப் பெருந்தொற்று பரவி வருகின்றது என்று உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.
சிங்கப்பூர், இந்தியா, தாய்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் தொற்றின் வேகம் அதிகரித்துள்ளது. சிங்கப்பூரில் மீண்டும் மாஸ்க் 11

## 'தங்கத்' துப்பாக்கி; கைதானார் துமிந்த!

கொழும்பு, மே 24
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க நேற்று முற்பகல் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
வெள்ளவத்தைப் பகுதியிலுள்ள தொடர்மாடிக் குடியிருப்பொன்றுக்குள் தங்க முலாம் பூசப்பட்ட ரி-56 ரக 11

## யாழ்ப்பாணத்தின் அழகு பிரமிக்கவைக்கின்றது

சீனப் பேராசிரியர் புகழாரம்

யாழ்ப்பாணம், மே 24
யாழ்ப்பாணக் குடாநாட்டின் அழகு பிரமிக்க வைக்கின்றது என்று சீனாவின் சிங்குகா பல்கலைக்கழகத்தின் உதவிநிலைப் பேராசிரியர் கீ யான் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தின் பொருளியல் துறையின் ஏற்பாட்டில், 'சீனாவின் பொருளாதார 11

## முச்சந்தி முரளி

'உப்பில்லாமல் தவிக்கிற நாட்டில உவைக்கு தங்கத்துப்பாக்கி கேக்குது கண்டியளோ'

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 24
பிரதான மின்மார்க்கத்தால் பாய்ந்துகொண்டிருந்த மின்சாரம் தாக்கி, குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
சுன்னாகம் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ராசமணி சிறிகாந்தன் (வயது-48) என்பவரே இவ்வாறு நேற்றுமுன்தினம் 11

இலங்கையில்

## இனப்படுகொலைகளின்போது மௌனமாய் இருந்தது ஐ.நா.

ஐ.நா.வின் முக்கியஸ்தர் டொம் பிளெச்சர் ஏற்பு

கொழும்பு, மே 24
இலங்கை மற்றும் மியான்மர் நாடுகளில் இடம்பெற்ற மிகக்கொடிய மனித உரிமை மீறல்களின்போது ஐக்கிய நாடுகள் சபை மௌனமாக இருந்தது என்று ஐக்கிய நாடுகள் 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கொவிசெத**
திகதி 23.05.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4080
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 09 31 46 78
விசேட எழுத்து S

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 23.05.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1147
வெற்றி இலக்கினம் தும்பம்
வெற்றி இலக்கங்கள் 11 34 54 56

**NLB ஜய**
திகதி 23.05.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0106
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 5 6 6 2

**மெகா பவர்**
திகதி 23.05.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2186
ஆங்கில எழுத்து D
சுப்பர் இலக்கம் 20
வெற்றி இலக்கங்கள் 31 59 62 64

**மஹஜன சம்பத**
திகதி 23.05.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5838
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 5 1 2 8 2 8

**தன நிதானய**
திகதி 23.05.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1868
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 26 27 41 74
விசேட எழுத்து L

**அத சம்பத**
திகதி 23.05.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0413
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 2 8 2 8

# நினைவுகூரும் உரிமை உறவுகளுக்கு உள்ளது

## முன்னிலை சோசலிஷக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 24

**போரால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் உரிமை அவர்களின் உறவுகளுக்கு உள்ளது. அந்த உரிமைக்காக எமது கட்சி முன் னிற்கும் என்று முன்னிலை சோசலிஷக் கட்சியின் பரப்புரைச் செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.**

தனியார் தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் வாழும் இனக் குழுமங்களுக்கு சம உரிமைகள் உறுதிப்படுத்தப்படாததாலேயே இனப்பிரச்சினை தோற்றம் பெற்றது. கறுப்பு ஜூலைக் கலவரம், யாழ். நூலகம் எரிப்புப் போன்ற தமிழ் மக்களை இலக்குவைத்த அரசியல், பொருளாதார அழுத்தங்கள் ஆட்சியாளர்களால் பிரயோகிக்கப்பட்டன. அந்த அழுத்தங்களின் பிரதிபலனாகவே ஆயுதக்குழுக்கள் தோற்றம்பெற்றன.

தமிழ் மக்களுக்குரிய பிரச்சினையை ஏற்கின்றோம். ஆனால் தனிநாடு என்ற பிரபாகரனின் கொள்கையை ஏற்கமுடியாது. அன்றும், இன்றும் அதே நிலைப்பாட்டில்தான் உள்ளோம்.

வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமது உறவுகளை நினைவுகூரும் உரிமை உள்ளது. அந்த உரிமைக்காக நாம் முன்னிலையாவோம். நாம் பிரபாகரனின் அரசியல் மற்றும் நோக்கத்துடன் உடன்படவில்லை. அவரை நினைவுகூருவதை அனுமதிக்கவும் இல்லை. நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்காமல் இருப்பதைத் தடுப்பதற்குரிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது - என்றார். (எ-44)

**சுபிரி தன சம்பத**
திகதி 23.05.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0546
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கம் 3 7 1 3 7 9

**Super Ball DLB**
திகதி 23.05.2025 தினம் வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2812
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கம் 05 66 74 80

**சனிதா DLB**
திகதி 23.05.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கம் 38 43 55 75
வெற்றி வாரம் 4973

**SASIRI DLB**
திகதி 23.05.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0688
வெற்றி இலக்கம் 20 34 42

**லக்ன ராசி DLB**
திகதி 23.05.2025 தினம் வெள்ளிக்கிழமை
சிம்மம்
வெற்றி இலக்கம் 17 25 38 44
சீட்டிழுப்பு வாரம் 4524

**KAPRUKA DLB**
திகதி 23.05.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து V
சுப்பர் இலக்கம் 35
வெற்றி இலக்கம் 21 43 70 74
வெற்றி வாரம் 1988

**அத கோடிபதி DLB**
திகதி 23.05.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கம் 34 37 46 58
வெற்றி வாரம் 2638

# அநுரகுமாரவின் வெற்றி ரணில் வகுத்த வியூகமாம்

## துஷார இந்துனில் தெரிவிப்பு

கொழும்பு, மே 24



தோல்வியடையும் நிலையில் இருந்த அநுரகுமார திஸாநாயக்கவை ஜனாதிபதியாக்கியது ரணில் விக்கிரம சிங்கவின் வியூகம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிப் பொது செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான துஷார இந்துனில் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ரணில் விக்கிரமசிங்கவின் ஒரேயொரு எதிரி சஜித் பிரேமதாஸதான். அவரைத் தோற்கடிப்பதற்காக ரணில் எதையும் செய்வார். அநுரகுமார திஸாநாயக்கவை ஆட்சிபீடத்தில் அமர்த்தி சஜித்தை தோல்வியடையச் செய்தது ரணில்தான்.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரவுக்கு 42 வீத வாக்குகள் கிடைத்தன. 58 வீத வாக்குகள் அவருக்கு எதிராக வீழ்ந்தன. ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தாது நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தியிருந்தால் அநுரவுக்கு எதிரான அந்த 58 வீத வாக்குகளால் பெற்ற ஆசனங்கள் சஜித்தோடு இணைந்திருக்கும்.

சஜித் நாடாளுமன்ற ஆட்சியைப் பிடித்திருப்பார். முதல் தேர்தலில் வென்ற கட்சியே அடுத்த தேர்தலிலும் வெல்லும் என்ற அரசியல் கலாசாரம் எமது நாட்டில் இருப்பதால் அதனைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலிலும் அவரே வெற்றி பெற்றிருப்பார். அதை அறிந்துதான் ரணில் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார். அதில் அநுர வென்றதும் நாடாளுமன்றத் தேர்தலிலும் வென்றார். இது அனைத்தும் ரணிலின் திட்டம் - என்றார். (எ-75)

# ஹரிணி - ஜூலி சங் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, மே 24

பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கு இடையே நேற்றுமுன்தினம் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இலங்கைக்கு அமெரிக்க வெளிநாட்டு உதவிகளை வழங்குவதற்கான வழிமுறைகள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான நிலைபேறான ஒத்துழைப்புக்கு பங்களிக்கும் வழிகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (எ-இ)

# பிரபாகரனுக்குச் சிலை வைப்பதாக எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறவில்லை

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

கொழும்பு, மே 24

பிரபாகரனுக்கு சிலை வைப்பது தொடர்பில் நான் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. நாட்டில் நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கு நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தடுப்பதற்கு எதிர்க்கட்சியினர் மேற்கொள்ளும் பொய்ப் பரப்புரையே இது. இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நான் சபையில் இல்லாத சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா நான் கூறினேன் என்று தவறான கருத்தொன்றை சபையில் தெரிவித்துள்ளார். பிரபாகரனுக்கு சிலை வைப்பது தொடர்பாக நான் சபையில் தெரிவித்தேன் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இதனை அவருக்குக் கூறினார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் அவ்வாறு கூறவில்லை. எனது கட்சியின் தலைவர் ரோஹண விஜேவீர. நான் அவருடன் நெருக்கமாகப் பழகியவன். அவர் மறைந்தாலும் அந்த நினைவுகளும் உணர்வுகளும் என்றும் எனக்குள் இருக்கின்றன. எங்கள் அனைவருக்கும் தலைமைத்துவம் வழங்கிய எமது தலைவர் ரோஹண விஜேவீரவுக்கு சிலை வைக்கவேண்டும் என்றுகூட நான் இதுவரை எங்கும் கூறியதில்லை. அவ்வாறான நான் வேறு ஒருவருக்குச் சிலை வைப்பது தொடர்பில் கூறுவேனா? நாடாளுமன்ற உறுப்பினர் கூறியது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

எதிர்க்கட்சியினர் கூறுவதற்கு எதுவும் இல்லாமல் இந்தளவு அடிமட்டத்திற்குச் சென்றுள்ளனர் என்பது தொடர்பில் நான் கவலையடைகின்றேன். இந்த நாட்டில் மரணமடைந்தவர்கள் பாரிய அளவில் உள்ளனர். அவ்வாறு மரணமடைந்த அனைவருமே எமது சகோதரர்கள். அவர்களுக்காக நான் முன்நிற்பேனே தவிர, ஒரு நபர் அல்லது ஒரு தலைவருக்காக நான் முன்னிற்கமாட்டேன் - என்றார். (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்கி உறுதிமொழியை நிறைவேற்றுக

## ஆசு மாரசிங்க வலியுறுத்து



**கொழும்பு, மே 24**

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்குரிய சந்தர்ப்பம் உதயமாகியுள்ளது. அதைச் சரிவரப் பயன்படுத்தி வழங்கிய உறுதிமொழியை ஜனாதிபதி நிறைவேற்றவேண்டும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பேராசிரியர் ஆசு மாரசிங்க வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவேன் என உறுதியளித்தே சந்திரிக்கா இரு தடவைகள் ஆட்சிக்கு வந்தார். மஹிந்தவும் அந்த உறுதிமொழியையே வழங்கினார்.


நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு மேற்படி தரப்புகளுக்கு ஜே.வி.பியினர் ஆதரவுவழங்கினர். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்ற உறுதிமொழியைத் தேசிய மக்கள் சக்தியும் வழங்கியுள்ளது. எனவே, அநுரகுமார திஸாநாயக்கவே இந்தத நாட்டின் கடைசி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு 159 ஆசனங்கள் உள்ளன. அதைச் சரிவரப் பயன்படுத்தி அரசியலமைப்பு மாற்றத்தை செய்ய வேண்டும். இது தொடர்பில் தற்போது கருத்தாடல் இல்லை. எனவே, கருத்தாடலை நாம் ஆரம்பிக்கவேண்டும்.

அரசாங்கமும் வழங்கிய வாக்குறுதியை மறந்து செயற்படக்கூடாது-என்றார். (ஏ-44)

# வீதித்தடை

யாழ்.பஸ்தரிப்பு நிலையை மதகு புனரமைப்புவேலைநாளைஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் யாழ்.பொது மருத்துவமனை வீதியையும், மின்சாரசபை நிலைய வீதியையும் இணைக்கும் வைரவர் கோவில் வீதியைப் பகுதியளவில் மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியால் வாகனங்களில் பயணிப்போர் சிரமமின்றி போக்குவரத்தச்செய்யமாற்றுப்பாதையைப் பயன்படுத்துமாறு யாழ்.மாநகர சபை அறிவித்துள்ளது. (ச-25)



# சிறுமி துஷ்பிரயோகம் பிக்கு கைது

கொழும்பு, மே 24

13 வயது சிறுமியைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பிக்கு ஒருவர் எதிர்வரும் 26ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். செவனகலப் பிரதேசத்தைச் சேர்ந்த பிக்குவே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். வயிற்றுக் கோளாறு காரணமாக, அந்தச் சிறுமி தன்னுடைய தந்தையுடன் கடந்த 18ஆம் திகதியன்று விகாரைக்குச் சென்று பிக்குவைச் சந்தித்துள்ளார்.

இருவரையும் அமரச் சொன்ன பிக்கு, தேசிக்காயை வெட்டி வழிந்தோடும் நீரில் வீசிவிட்டு வருமாறு தந்தையிடம் கூறியபோது தந்தை வெளியேறிய நிலையில் சிறுமியை தான் வசிக்கும் வீட்டுக்கு அழைத்துச் சென்ற பிக்கு, அங்கு வைத்து பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (ச-இ)



# கிளிநொச்சி விவசாயிகளுக்கு ரூ.190 மில்லியன் உரமானியம்

கிளிநொச்சி , மே 24

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டு சிறுபோகச் செய்கைக்காக அரசாங்கத்தின் உரமானியமாக இதுவரை 6 ஆயிரத்து 200 விவசாயிகளுக்கு 190 மில்லியன் ரூபா வைப்பில் இடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டு 10ஆயிரத்து 800 ஹெக்ரேயரில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்டத்தில் போதிய மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளது.

சிறுபோகச்செய்கைக்காக விவசாயிகளுக்கு 190 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது. என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25,113)

# ஜூன் 10இல் ஜனாதிபதி ஜேர்மன் பயணம்

யாழ்ப்பாணம், மே 24

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஜேர்மன் நாட்டுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி மேற்கொள்ளவுள்ளார். பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியுறவு அமைச்சர் இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதி முதலில் இந்தியாவுக்கும் பின்னர் சீனாவிற்கும் விஜயம்செய்தார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு விஜயம்செய்த பின்னர், ஜனாதிபதியின் முதல் ஐரோப்பியப் பயணமாக இந்த ஜேர்மன் பயணம் அமையவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# இனநல்லிணக்கம் இன்னமும் இல்லை

கொழும்பு, மே 24

இனநல்லிணக்கம் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை என மக்கள் போராட்ட இயக்கத்தின் முக்கிய உறுப்பினரான நுவான் போபகே தெரிவித்துள்ளார்.

மக்கள் போராட்ட இயக்கம் ஏற்பாடுசெய்திருந்த ஊடக மகாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது - இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய நேரத்தில் ஜனாதிபதி யுத்த வெற்றி கொண்டாட்டங்களில் ஈடுபடுகிறார். இலங்கையில் இன்னொரு யுத்தம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பு. தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும் - என்றார். (ச-6)




**ஆமை புகுந்த வீடும் ஆமி புகுந்த ஊரும் சர்வநாசமாகிறது சகஜம்தான். ஆமையாவது வீட்டில கொஞ்சநேரம் இருந்திட்டு பிறகு எங்கையாவது குளம், குட்டையைத் தேடிப் போடும். ஆனால் ஆமி அப்பிடியில்லை. ஒரு இடத்தைப் பிடிச்சுவைச்சிருந்தால், அதில இருந்து அவையை எழுப்பிறது பெரும்பாடு. சண்டையெல்லாம் முடிஞ்சு பதினாறு வருசத்துக்குப் பிறகும்கூட, தாங்கள் பிடிச்ச இடங்களை விட ஆமிக்கு மனமில்லை. ஏதும் தேவைப்பாட்டோட இருந்தால்கூட பரவாயில்லை. ஆனால் சனத்தின்ர காணியை வைச்சுக் கொண்டு எப்பிடி அதைவைச்சு உழைக்கலாம் எண்டுதான் இப்ப ஆமிக்காரரும் யோசிக்கினம்.**

**பலாலிக்கும் கிட்டத்தில, மயிலிட்டியால போற கடற்கரை றோட்டில ஆமிக்காரர் வெளிச்சக்கூடுகள் எல்லாம் பெரிசாக் கட்டி, லைற்றெல்லாம் போட்டு, இந்தமுறை வெசாக் கண்காட்சி வைச்சவை. எங்கட சனமும் விடுப்புப்பாக்கவும், ஆமி குடுக்கிற தானத்தை வாங்கவும் விழுந்தடிச்சுக்கொண்டு போனவை. மூண்டு நாளோட முடிக்கவேண்டிய கண்காட்சியை எங்கட சனம் குவியிறதைப் பார்த்திட்டு நாலுநாளா ஆமிக்காரர் நடத்தினவையாம். பக்கத்தில இருக்கிற திஸ்ஸ விகாரைக்கு எதிராப் போராட வாருங்கோ எண்டா காதில வாங்கிக்கொள்ளாமல், அந்தப் பக்கம் எட்டியும் பாக்காமல் திரியிறவையெல்லாம், வெசாக்கூடு பாக்க குடும்பத்தோட போயிருக்கினம். இப்பிடித் தங்கட இடத்துக்கு சனங்கள் கடல்மாதிரி வந்ததைப் பார்த்த ஆமிக்கு ஒரு பிஸ்னஸ் ஐடியா வந்திருக்கு.**

**அந்த இடத்தை பேமஸ் ஆக்கி, அதைக் காசாக்குவம் எண்டு அவையள் நினைச்சிருக்கினம். நினைச்சதோட நிக்காமல், உடனேயே ஒரு கடையும் போட்டிட்டினமாம். அந்த இடத்தில 'வேற்றுமைகளைக் களைந்து ஒன்றிணைவோம்' எண்டு எழுதிவைச்சுப்போட்டு, சனத்தின்ர காணிக்கு மேல கடைபோட்டு நல்லா 'கல்லா' கட்டுகினம். சோளம்தான் அந்தக் கடையில நல்லா ஓடுதாம். அந்தச் சோளம்கூட எங்கையிருந்து வருகுதெண்டு நினைக்கிறியள். அதுவும் அதே வலி, வடக்கில இருக்கிற சனத்தின்ர காணிக்குள்ள ஆமி செய்யிற தோட்டத்தில விளைஞ்சதுதானாம். இப்பிடி சனத்தின்ர காணியில தோட்டம் செய்து, அங்க விளையிற பொருள்களையும் சனத்தின்ர காணியில கட்டின கடையில போட்டு, எங்கட சனத்துக்கே அதை வித்துப்போட்டு, காசைமட்டும் ஆமிக்காரர் தாங்களே எடுக்கினமாம். உவையளுக்கு சண்டைபிடிக்கிறதைவிட, இப்பிடி சனத்தின்ர காணி பிடிக்கிறதும், அந்தக் காணியளை வைச்சு எப்பிடிக் காசாக்கிறதும் எண்ட வித்தையள்மட்டும் நல்லாத் தெரியுது கண்டியளோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மன உறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுஎடுப்பதற்கு உகந்த நாள். சிலருக்கு திடீர் பணவரவு மகிழ்ச்சிதரும். சகோதரர்கள்வகையில் சுபச்செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சிலருக்கு உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள்வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். நண்பர்களின்மூலம் முக்கிய பிரச்சினை ஒன்று நல்லபடி முடிவுக்குவரும். சகோதரர்கள் உங்கள் முயற்சிக்கு ஆதரவாக இருப்பார்கள்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச்செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகமுடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை காலையிலேயே தொடங்குவது நல்லது. வாகனத்தில் செல்லும்போது கவனமாகச் செல்லவும்.

**சிம்மம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் அவசியம். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அவ்வப்போது குழப்பம் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும்.

**விருச்சிகம்:** தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு அவ்வப்போது மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்பப் பெரியவர்கள் கடுமையாகப் பேசினாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை முழு ஒத்துழைப்புத் தருவார். சிலருக்கு அதிகரிக்கும் செலவுகளால் கடன்வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாகமுடியும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றும்வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் உண்டாகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

படங்கள் சிவசாந்தன்





இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ச-25,66,17)

## கஞ்சாவுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் 9 கிராம் கஞ்சாவைக் கைப்பற்றியதுடன் 27 வயதான இளைஞர் ஒருவரை கைதுசெய்தனர்.

சான்றுப்பொருளுடன் சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

## யாழ்.மாநகரப் பிரதேசத்தில் டெங்குக் களப்பரிசோதனை

யாழ்ப்பாணம், மே 24

யாழ்.மாநகரப் பிரதே சத்தில் விசேட டெங்கு களப்பரிசோதனை நடவடிக்கைகள் கடந்தவியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. டெங்கின் தாக்கம் கடந்த காலங்களில் அதிகமாகக் காணப்பட்ட இடங்களில் இந்தச் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன.



நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நாவாந்துறையிலும் நேற்று வெள்ளிக்கிழமை குருநகரிலும் இடம்பெற்றன. மூன்றாவது நாளான இன்று கொழும்புத்துறையில் டெங்குக் களப்பரிசோதனை இடம்பெறும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச-41-17)



## நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 24

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் நாய்களுக்கான விசர்நோய்க்கான ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

நேற்று சனிக்கிழமை ஊரெழு ஜே/267 கிராம சேவையாளர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.உதயபாலா தெரிவித்துள்ளார். (ச-41-17)

## கலைஞர், மாணவர்கள் மதிப்பளிப்பு

அனலைதீவு, மே 24

அனலைதீவு அருணோதயா சனசமூக நிலையம், அருணோதயா இயல் இசை நாடகமன்றம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், கலைஞர் மற்றும் மாணவர்கள் மதிப்பளிப்பு நிகழ்வு நிலையக் கலையரங்கில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. மன்றத் தலைவர் த.கோகுல்ராஜ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை ஓய்வுநிலை அதிபர் ச.விக்னேஸ்வரி கலந்துகொள்ளவுள்ளார். (ச-25,9)


## மரண அறிவித்தல்

மலர்வு 06 . 01 . 1923



உதிர்வு 22 . 05 . 2025

**வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்**

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் கடந்த (22.05.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-நன்னிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற பூதப்பிள்ளை-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம்-தங்கம்மா, ஆறுமுகம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கனகேஸ்வரி, வசந்தா, தவசோதி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற தில்லைநடேசன் மற்றும் ஈஸ்வரமூர்த்தி, கௌரி ஆகியோரின் மாமனாரும் சகிதா, அருந்தவநாதன், அஜித்தா, மகேந்திரம், அமலன், சுகன்யா, விபூர்தினி, ரமணன் ஆகியோரின் பேரனும் பிருந்தா, யுவன், அஸ்விகன், சஞ்சனா, அட்சயன், அனிவ், அர்ஜீன், சிவா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.05.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 278 1098
021 224 2517


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

**நாளொரு நல்வார்த்தை**

உங்களின் வறுமை உடன்பிறந்தது, தவிர்க்கமுடியாதது, தீர்க்கமுடியாதது என்றெண்ணுவது மடமை ஆகும்.


– அம்பேத்கர் –

# மீண்டும் பேரரக்கன்!

தெற்காசிய நாடுகளில் கொரோனாத் தொற்று மீண்டும் தீவிரமாகப் பரவ ஆரம்பித்துள்ளது. சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் ஒவ்வொருநாளும் நூற்றுக்கணக்கானவர்கள் இந்தத் தொற்றுக்கு ஆட்பட்டுவருகின்றனர். பொதுமுடக்கங்கள் ஏற்படும் அளவுக்கு சில நாடுகளில் நிலைமை கைமீறியிருக்கின்றது. இன்னும் சில நாடுகளில் கொரோனாத்தொற்று பொதுமுடக்கங்களை ஏற்படுத்தலாம் என்ற எச்சரிக்கையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் 'மாஸ்க்' அணிவதைக் கட்டாயமாக்கும்வகையில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இலங் கைக்குள் அவ்வாறான நிலை இன்னும் ஏற்படவில்லையாயினும் உச்சகட்ட அவதானத்துடன் செயற்படவேண்டிய காலம் இது.

2019ஆம் ஆண்டில் உலக நாடுகளிடையே கொரோனாப் பெருந்தொற்றுப் பரவியபோது, இலங்கையில், போதியளவு முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மாறாக ஒருவித மெத்தனப்போக்கிலேயே செயற்பட்டிருந்தனர். காலப்போக்கில் கொரோனாப் பெருந்தொற்று சமூகங்களுக்கு இடையே பரவி - விரவிய பின்னர்தான், ஆட்சியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் ஞானம் பிறந்தது. ஆனால், வெள்ளம் தலையை மேவிய பின்னர் மேற்கொள்ளப்பட்ட அந்த நடவடிக்கைகளால் எந்த நன்மையும் இலங்கைக்குக் கிட்டவில்லை. மாறாக, பொருளாதாரப் பேரழிவே மிச்சமாகியிருந்தது. இன்னும் சொல்லப்போனால், அப்போதைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடிப்பதற்கு, கொவிட் பெருந்தொற்று ஏற்படுத்திய பொருளாதாரப் பேரழிவுகளும் பிரதான காரணமாக அமைந்தன.

எனவே, தெற்காசிய நாடுகளுக்கு இடையே தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா அலையை ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் வெற்றிகரமாக எதிர்கொள்ளவேண்டும். முன்பு இருந்ததைவிடவும் தற்போது இந்தியாவுடனான தொடர்பு பரவலாக்கப்பட்டுள்ளது. விமானங்கள் மூலமாக மட்டுமல்லாமல் கப்பல்கள் மூலமும் ஏராளமான இந்தியர்கள் வாராவாரம் இலங்கைக்கு வருகின்றனர். எனவே, விமானநிலையங்கள், துறைமுகங்கள் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைகளைத் தீவிரமாக்கவேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு நாங்கள் அவதானமாக இருக்கின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது. பொருளாதாரப் பின்னடைவுகள் மற்றும் நெருக்கடிகள் காரணமாக பேரழிவைச் சந்தித்த இலங்கை தற்போதுதான் மெல்லத் தலைதூக்கியிருக்கின்றது. இவ்வாறான நிலையில், மீண்டும் முடக்கங்கள், ஊரடங்குகள் என்று சென்றால், அதனால் ஏற்படும் விளைவை இந்த நாடு தாங்காது. அவ்வாறான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு வருமுன் காப்பதே சிறந்தது. ஒவ்வொரு விடயங்களிலும், கடந்த அரசாங்கங்களை விமர்சித்த அநுர அரசாங்கம், தற்போது ஆட்சியில் இருக்கும்போது அத்தகைய விடயங்களை எதிர்கொள்வதில் பெரும் சரிவையும் பின்னடைவும் எதிர்கொண்டுவருகின்றது. அத்தகைய கையாலாகாத தனத்தை கொரோனாப் பெருந்தொற்றை எதிர்கொள்ளும் விடயத்திலேனும் காட்டாமல் இருக்கட்டும்.



## இலங்கை தொடர்பாக ஐ.எம்.எப். எதிர்வரும் வாரங்களில் ஆராயும்



கொழும்பு, மே 24

**சர்வதேச நாணயநிதியத்தின் நிர்வாகக்குழு எதிர்வரும் வாரங்களில் கூடி இலங்கை தொடர்பில் ஆராயவுள்ளது. சர்வதேச நாணயநிதியத்தின் பணியாளர்களுக்கும், இலங்கை அதிகாரிகளுக்கும் இடையே எட்டப்பட்ட பணியாளர் நிலை ஒப்பந்தத்தை அங்கீகரிப்பது தொடர்பாக இதன்போது தீர்மானிக்கப்படும் என்று நிதியத்தின் பேச்சாளர் ஜூலி கோசாக் தெரிவித்துள்ளார். வோசிங்டனில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

இலங்கையில், மின்சார செலவு மீட்பு விலையைத் தீர்மானித்தல் மற்றும் மின்சார கட்டணப் பொறிமுறை ஆகியன சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக்குழுவின் ஒப்புதலுக்கு முக்கியமான நிபந்தனைகளாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த மாதம் 25ஆம் திகதி நாட்டின் பொருளாதாரத் திட்டத்தின் நான்காவது மதிப்பாய்வு தொடர்பாக சர்வதேச நாணயநிதியத்தின் பணியாளர் நிலை ஒப்பந்தம் எட்டப்பட்டது. இந்த ஒப்பந்தம் முறையாக அங்கீகரிக்கப்பட்டதும், இலங்கை அதன் தற்போதைய ஏற்பாட்டின்கீழ், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 334 மில்லியன் டொலரைப் பெற்றுக்கொள்ளும் என்றும் ஜூலி கோசாக் தெரிவித்துள்ளார். (எ-இ)

## தேசிய மக்கள் சக்திக்கு பிரபா கணேசன் ஆதரவு

கொழும்பு, மே 24

கொழும்பு மாநகரசபையில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க ஜனநாயகத் தேசியக் கூட்டணி தீர்மானித்துள்ளது. நேற்றுமுன்தினம் கூடிய கட்சியின் செயற்குழு இந்த முடிவை எடுத்துள்ளது என்று கட்சியின் தலைவர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார். கொழும்பு மாநகரசபையில் ஜனநாயகத் தேசியக் கூட்டணி ஒரு ஆசனத்தைக் பெற்றுக் கொண்டுள்ளது. (எ-இ)

## தயாசிறியின் நடத்தையை விசாரிப்பதற்குக் குழு

கொழும்பு, மே 24

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் நடத்தை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன அறிவித்துள்ளார். எனக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. மே 20ஆம் திகதி அன்று நாடாளுமன்றத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நடந்துகொண்ட விதம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பணி இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் சபாநாயகர் மேலும் கூறினார். (ச-இ)

## வாகன இறக்குமதிக்காக 450 மில்.டொலர் விடுவிப்பு

இலங்கையில் வாகன இறக்குமதிக்காக சுமார் 450 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள நாணயக் கடிதங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.
சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள வாகனங்கள் ஏற்கனவே நாட்டுக்கு இறக்குமதிசெய்யப்பட்டுள்ளன
இந்நிலையில், 2025 ஆம் ஆண்டில் வாகன இறக்குமதிக்காக 1 பில்லியன் அமெரிக்க டொலர் வரை ஒதுக்க எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## அரச வாகனங்களுக்கு டிஜிற்றல் எரிபொருள் அட்டைகள்

கொழும்பு, மே 24

அரச வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கு டிஜிற்றல் எரிபொருள் அட்டைகளை விநியோகிப்பதற்கு பெற்றோலிய க் கூட்டுத்தாபனம் முடிவுசெய்துள்ளது.
இந்த அட்டையினைப் பாவித்து இலங்கையிலுள்ள எந்தவொரு எரிபொருள் நிரப்புநிலையத்திலும் எரிபொருள் நிரப்ப முடியும். இந்தத் திட்டத்தின்மூலம் தேவையற்ற ஆவணப்படுத்தல்களைக் குறைக்கலாம் எனவும் வெளிப்படைத்தன்மையைப் பேணலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-6)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

**நாளை** ஞாயிற்றுக்கிழமை- வைகாசி 11
25.05.2025
சுபநேரம் : 08.52- 10.22
ராகுகாலம் : 04.22 - 05.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பதவிகளுக்காகச் சண்டையிடாமல் தமிழின ஒற்றுமைக்காகப் பாடுபடுவோம்

## சிங்களத் தேசியக் கட்சிக்கு இடமில்லை என்றும் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 24

**பதவிக்காகச் சண்டையிடாமல் விட்டுக்கொடுப்புடன் தமிழினத்தின் ஒற்றுமைக்காக அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் பங்களிக்கவேண்டும் .வல்வெட்டித்துறையில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுள்ள எமது தேசியம் சார்ந்த கட்சி ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். மாநகரசபையில் சிங்களத் தேசியக் கட்சி ஆட்சியமைப்பதற்கு நாம் விடமாட்டோம் என்று எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வல்வெட்டித்துறையில் 7 வட்டாரங்கள் எமக்கும், 2 வட்டாரங்கள் தமிழரசுக் கட்சிக்கும் கிடைத்திருக்கின்றன. தமிழரசுக்கட்சிக்கும், தேசிய மக்கள் சக்திக்கும் 3 போனஸ் ஆசனங்களும், ஈ.பி.டி.பி.க்கு ஒரு போனஸ் ஆசனமும் கிடைத்திருக்கின்றது. தமிழரசுக்கட்சி வேட்பாளரை நிறுத்தினால், எம்மை வீழ்த்தவேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி செயற்படும். இரகசிய வாக்கெடுப்பில் தமிழரசுக்கட்சிக்கு தேசிய மக்கள் சக்தி வாக்களிக்கும். பழி எம்மில் வரும். தேர்தலுக்கு அப்பால் தமிழ்த்தேசியக் கட்சிகள் ஒன்றாகச் செயற்பட வேண்டும். பிமல் ரத்நாயக்க நிதி தரமாட்டேன் என்று கூறுகின்றார்.

ஆனால் வல்வெட்டித்துறையில் நாம் ஆட்சியமைத்தால் அனைத்து சக உறுப்பினர்களுக்கும் நிதி சமமாகப் பங்கிடப்படும். அதேவேளை வல்வெட்டித்துறையில் தனியார் காணி வாங்கி மாவீரர் நினைவுத் தூபி, முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி என்பன கட்டியெழுப்பப்படும். தேசியத் தலைவரின் பெற்றோரின் நினைவாக அரங்கம் நிறுவப்படும்-என்றார். (எ-125,20)

### அசைவ உணவகத்தின்

# பெயர்ப்பலகையை தூக்கிய மாநகரசபை

யாழ்ப்பாணம், மே 24

நல்லூர் ஆலய முன்றலில் மாநகரசபையின் அனுமதியின்றித் திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தின் பெயர்ப்பலகை மாநகரசபையினரால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அகற்றப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய முன்றலில் மாநகரசபையிடம் அனுமதிபெறாது, அசைவ உணவகம் திறக்கப்பட்டுள்ள நிலையில் உணவகத்துக்கான அனுமதிகளைப் பெறுமாறு மாநகரசபை, உணவகத்துக்கு அறிவுறுத்திய நிலையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த உணவகத்தில் சில சுகாதாரக் குறைபாடுகள் காணப்பட்டமை தொடர்பில் மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால், யாழ். நீதிமன்றில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

இதேவேளை நல்லூர் ஆலயச் சூழலில் புனிதத் தன்மையைப் பேணும் வகையில் குறித்த உணவகத்தை அகற்றக்கோரி கடந்த செவ்வாய்க்கிழமை கண்டன போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் கடந்த புதன்கிழமை மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-26,66,20)

# சமய அறிவுப்போட்டி விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 24

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு காளிகோவிலடி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், சமய அறிவுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை ஆலயத்துக்கு முன்பாகவுள்ள அம்பாள் மல்ரி சென்ரரில் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை பெற்றுக்கொள்ளலாம். (ச-25)

# கடையில் களவாடிய திருடன் பிடிபடவில்லை!

யாழ்ப்பாணம், மே 24

நவாலியில் அண்மையில் கடையை உடைத்துத் திருடிய சந்தேகநபர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என்று மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நவாலிப் பகுதியில் அமைந்துள்ள கடை ஒன்று தேர்தலுக்கு முதல் நாள் இரவு உடைக்கப்பட்டு சி.சி.ரி.வி. கமரா உள்ளிட்ட ஆவணங்கள் களவாடப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டநிலையில் இதுவரை சந்தேகநபர் கைதுசெய்யப்படவில்லை.

மற்றுமொரு முறைப்பாடு தொடர்பிலேயே சந்தேகநபர் ஒருவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)



# யாழில் கடவுச்சீட்டு அலுவலகம் புனரமைப்புப் பணி ஆராய்வு!

யாழ்ப்பாணம், மே 24

யாழ்.மாவட்டச் செயலகத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள கடவுச்சீட்டு அலுவலகப் புனரமைப்பு வேலைகள் தொடர்பான முன்னேற்றக் கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டச் செயலகத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள கடவுச்சீட்டு அலுவலகத்தின் புனரமைப்பு வேலைகளை விரைவாக நிறைவேற்றிமுடிக்கவேண்டியுள்ளது. அத்துடன் ஒப்பந்தக்காரர்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைகளின் முன்னேற்றத்தினை ஒவ்வொன்றாக ஆராய்ந்து உரிய அறிவுறுத்தல்களைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கியுள்ளோம் - என்றார்.

கலந்துரையாடலைத் தொடர்ந்து யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் கடவுச்சீட்டு அலுவலகம் அமையவுள்ள இடத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைகளை நேரடியாக ஆய்வுசெய்தார். (ச-66,27,9)

# முதலை இழுத்துச்சென்ற குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, மே 24

மட்டக்களப்பு மண்முனைப் பாலத்தின்கீழ் மீன்பிடித்துக்கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவரை முதலை இழுத்துச் சென்ற நிலையில் இரண்டு நாள்களின் பின்னர் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கடந்த 20ஆம் திகதி நீரோடைப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போதே குறித்த நபரை முதலை இழுத்துச் சென்றுள்ளது. உயிரிழந்தவர் புதுக்குடியிருப்புக் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அழகுதுரை அழகேசன் (வயது -35) என்பவராவார். (ச- 25, 9)

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சர்வதேச புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாண சர்வதேச புத்தகக் கண்காட்சி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடக்கு ஆளுநர் நா.வேதநாயகனால், கடந்த புதன்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது.


இதன்போது க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மாவட்ட ரீதியில் முன்னிலை பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன. குறித்த கண்காட்சி நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச- 25,9)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 22.05.1952 — இறப்பு 20.05.2025



## முருகேசு செல்வரட்ணம்

கொட்டடி பன்னாலை தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் குருநாதர் கோவில் வீதி, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்வரட்ணம் அவர்கள் (20.05.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு புதல்வரும் காலஞ்சென்றவர்களான குணரட்ணம் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் யுவராஜா, அஜித்தா.கேந்திரன், புவிதாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கோடீஸ்வரன், பேரரசி ஆகியோரின் அன்பு மாமனாரும் கன்ஷா, லியானா ஆகியோரின் அன்பு பேரனாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் ஜெகதீஸ்வரன், பரமநாதன், தவமலர் ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (25.05.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 11.00 மணியளவில் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் . நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குருநாதர் கோவில் வீதி ,
தெல்லிப்பழை.

தகவல்-குடும்பத்தினர்
0776580797
0766786618

# மரண அறிவித்தல்

தோற்றம் 20.10.1946 — மறைவு 21.05.2025



## துரைராஜா புஸ்பராணி

கொக்குவில் கிழக்கு நந்தாவிலை பிறப்பிடமாகவும் சம்பியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா புஸ்பராணி 21.05.2025 புதன்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற துரைராஜாவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான சீவரட்ணம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற ராஜேஸ்வரி (பேபி), யோகராணி, சண்முகதாஸ் (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரகுநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சரோஜினி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.05.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82/2 சம்பியன் வீதி
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்
021 205 2323

(CS 58338) E-1

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 13.04.1934 — மறைவு 22.05.2025

## கந்தையா செல்லையா

(செல்லையா & பிறதேர்ஸ் - காங்கேசன்துறை)

தையிட்டியைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லையா (செல்லையா & பிறதேர்ஸ் - காங்கேசன்துறை) அவர்கள் 22.05.2025 வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான வைரவப்பிள்ளை - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, பொன்னம்மா, பொன்னுத்துரை, சரஸ்வதி ஆகியோரின் அன்பு சகோதரனும், சாரதா தேவி, காலஞ்சென்ற அன்பழகன் மற்றும் சகுந்தலா தேவி, சரசாதேவி, கலையழகன், அருளழகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சபேசன், தமிழ்வளர்செல்வி, தேவராஜா, ஞானச்சந்திரன், அமுதா ஆகியோரின் அன்பு மாமனாரும், அஞ்சலிகா, நிரோஷன் மஜந்தா, மஞ்சுதன், மாருசன், சுகன்யா, சாருஜா, நிஷானுஜா, கிருஷானா, டிசானி, ராலன் ஆகியோரின் பேரனும், பிறீனிஸ் நயினிகா, நிகில், யுவினா, சைரஸ், ஏசா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (25.05.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நாச்சிமார் கோவிலடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1010/12 B கே.கே.எஸ் வீதி
நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்
சகுந்தலா தேவி, தேவராஜா
077 047 0182, 021 222 5554

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீட்டு பணிப் பெண் தேவை**

அரச உத்தியோகம் பார்க்கும் சிறிய வீட்டிற்கு பணிப்பெண் தேவை.
(தங்குமிட வசதி உண்டு)

தொடர்பு: 077 369 6714
077 065 5389

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை வீதியில் இருந்து 100m தூரத்தில் கட்டப்பிராயில் 4 பரப்பும் 3 குழியும் வீட்டுடனான காணி விற்பனைக்கு உண்டு.

076 330 9761
WhatsApp: +1 905 923 6664

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் ஊரெழு பிள்ளையார் கோவிலிற்கு அருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 711 5438, 077 327 6462

## தவறான முடிவெடுத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 24

கொடிகாமம் மந்துவில் பகுதியில் தவறான முடிவெடுத்து 49 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி பிரிவு திடீர் மரண விசாரணை அதிகாரி சி.சி.இளங்கீரன் மரண விசாரணையை மேற்கொண்டார். சாவகச்சேரி சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-25,159)

## கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 24

அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் செ.அன்புராசா அடிகளாரின் 'விருத்தப் பாமழை ஆயிரம்' என்ற கவிதை நூலின் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இல.286,பிரதான வீதி,யாழ்ப்பா ணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா, சிறப்பு விருந்தினராக கவிஞர் சோ.பத்மநாதன், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாகாண அமதிகளின் முதல்வர் அருட்பணி போல் ஜெயந்தன் பச்சேக், யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம், திருக்குடும்ப கன்னியர்மட யாழ்.மாகாண முதல்வர் அருட்சகோதரி தியோபின் குரூஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் நூலுக்கான மதிப்பீட்டுரையை கவிஞர் ந. வடிவழகையனும், திருமதி மேரி மெக்டலீன் ஜெயக்கொடியும் ஏற்புரையை நூலாசிரியர் செ.அன்புராசா அமதியும் நிகழ்த்துவர். (ச-41)

## நாமலின் கிரிஷ் வழக்கு ஜூனில் விசாரணைக்கு

கொழும்பு, மே 24

கிரிஷ் நிறுவனத்திடமிருந்து 70 மில்லியன் ரூபா பணத்தைப் பெற்று முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிரான வழக்கை ஜூன் 27 ஆம் திகதி விசாரணைக்கு முன்னரான கலந்துரையாடலுக்கு அழைக்குமாறு கொழும்பு மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன முன் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## INVITATION FOR BID 2025/05
## Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award,the successful bidder shall not have been black listed and shall meet the CIDA registration and qualification requirements. Additional details are provided in the Procurement Document.
4. Interested eligible bidders may obtain further information from address given below in 5 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, health village pannai Jaffna. (T.P:0212222278, Fax: 0212229971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table


| CATEGORY II | Document Issuing/Purchasing Period | | | From 26.05.2025 until 06.06.2025 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 02.06.2025 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 09.06.2025 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2025/REC/W/12 | Improvement Work at SMO Office, Gurunagar | 3.64 | 90 Days | C8 or above (Buildings) | 3,000.00 | 36,000.00 | Till 24.08.2025 |
| NP/04/41/2025/REC/W/13 | Completion of GHC at PMCU Puththur | 8.49 | 135Days | C7 or above (Buildings) | 3,000.00 | 85,000.00 | Till 21.09.2025 |
| NP/04/41/2025/REC/W/14 | Improvement Work RDHS Office Front Building at RDHS Office, Health Village, Pannai | 9.56 | 145 Days | C7 or above (Buildings) | 3,000.00 | 96,000.00 | Till 21.09.2025 |
| NP/04/41/2025/REC/W/15 | Improvement Work at Chest Clinic Lab, Health Village, Pannai | 1.20 | 72Days | C9 or above (Buildings) | 1,500.00 | 12,000.00 | Till 24.08.2025 |
| NP/04/41/2025/CBG/W/03 | Rectification & Renovation of Accident and Emergency Unit Building at Base Hospital, Chavakachchari | 3.00 | 88Days | C8 or above (Buildings) | 3,000.00 | 30,000.00 | Till 24.08.2025 |

Chairman
Regional Procurement Committee
Regional Directorate of Health Service, Jaffna.

CR/4506/J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 12 1938



மறைவு 19 05 2025

### திரு. சுப்பிரமணியம் சிவதாசன்

(SLAS, ஓய்வுபெற்ற அமைச்சக செயலாளர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஆலோசகர்)

யாழ். சுதுமலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கொழும்பு, California ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவதாசன் அவர்கள் **19-05-2025** திங்கட்கிழமை அன்று **California**-வில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான "கடவுள்" சுப்பிரமணியம் ரத்தினம் தம்பதிகளின் பாசமிகு இளைய மகனும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், சரோஜினி அவர்களின் பாசமிகு கணவரும்,அரிச்சந்திரன் (ஹரி), அரவிந்தன் (விந்தன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்ஷினி அவர்களின் பாசமிகு மாமனாரும், நிஷா, அனுஷன், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவனேசன், திலகவதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கதிர்வேலாயுதப்பிள்ளை, ரோகினி, சிவநாதன், சித்ரா, நிமலநாதன், காலஞ்சென்ற ராஜராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், Dr.யசோ, மேனகை, கமலினி, சுகந்தன், Dr.சிவாஜினி ஆகியோரின் பாசமிகு மாமாவும், சிவப்பிரியா, சிவரம்யா, மயூரன், காலஞ்சென்ற மீரா, Dr.ரஜன், Dr.சாய் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்:

**Place: Fremont Memorial Chapel, 3723 Peralta Blvd, Fremont, CA 94536**
**Viewing: Sunday, May 25, 9:30 am to 11:00 am**
**Rituals: 11:00 am to 12:30 pm.**
**Cremation: Irvington Memorial Crematory, 41001 Chapel Way, Fremont 94538 at 1:00 pm**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**Contacts:**
**Vinthan: +1 510 579 8632 / Harry: +1 510 789 3408**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

- கரவெட்டி, இந்து, 1988, அர்த்தம், BSc (hons) in Quantiy Surveying, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (29720)
- வட்டுக்கோட்டை, இந்து, 1988, பூசம், Data Analysis, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (45522)
- KKS, இந்து, 1993, விசாகம், Masters, Canada Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை. (43203)
- திருநெல்வேலி, இந்து, 1986, கேட்டை, BSc, UK Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. (48612)
- இணுவில், இந்து, 1990, அனுஷம், Quantity Surveyer, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (34984)
- காரைநகர், 1989, இந்து, சித்திரை, Bachelors, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (41733)
- கொக்குவில்-உடுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Australia Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. (52796)
- சங்கானை-கோண்டாவில், இந்து, 1987, ரேவதி, MSc in Engineering, USA மணமகனுக்கு மணமகள் தேவை. (43866)
- வட்டுக்கோட்டை, இந்து, 1992, விசாகம், CIMA Qualified, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (33308)

எம்மிடம் எல்லா நாட்டிலும் எல்லா ஜாதியிலும், Unmarried மற்றும் Divorce மாப்பிள்ளைகளும் மணப் பெண்களும் உண்டு.

S Sharma J.P.
WWW.thaalee.com 077 539 3728




யாழ்ப்பாணம் மூளாய் அ.மி.த.க. பாடசாலை மாணவர்களால் புத்தாண்டுப் பாரம்பரியங்களில் ஒன்றான 'புத்தாண்டுப் பலகாரங்கள்' எனும் தொனிப்பொருளில் செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. (ச-41-125)

# கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மே 24

சுழிபுரம் பகுதியில் கசிப்புடன் ஒருவரை மானிப்பாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் விசேட ரோந்து நடவடிக்கைகளின்போது சந்தேகநபரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-22,125)

# சுதுமலை அம்பாளுக்கு பெருமஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 24

சுதுமலை அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மகோற்சவத்தின் பெருமஞ்சத் திருவிழா அடுத்தமாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-25)


## அழைப்பின் பேரில் (On-call) சாரதிகளை பதிவு செய்வதற்கான அழைப்பு - 2025
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது அலுவலக மற்றும் கல்விசார் நடவடிக்கைகளை செவ்வனே முன்னெடுத்துச் செல்ல, வாகனங்களை செலுத்துவதற்கான அழைப்பின் பேரில் சாரதிகளை பதிவு செய்ய உள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த தனிநபர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| இல | பணியிடம் | தேவையான சாரதிகள் | முன்னுரிமை வழங்கப்படும் மாவட்டம் |
|---|---|---|---|
| 01 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பிரதான வளாகம், திருநெல்வேலி | 03 | யாழ் மாவட்டத்தினை வதிவிடமாக கொண்டவர்கள் |
| 02 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அறிவியல் நகர் வளாகம், கிளிநொச்சி | 03 | கிளிநொச்சி மாவட்டத்தினை வதிவிடமாக கொண்டவர்கள் |

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்:**

- இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும். மேலும் அதைப் உறுதிப்படுத்தும் தேவையான ஆவணங்களை வழங்க வேண்டும்."
- வான், பஸ், பிக்கப், கார், முச்சக்கர வண்டி, உழவு இயந்திரம், சிறிய வகை வாகனங்கள், கைஉழவு இயந்திரம் மற்றும் கனரக வாகனங்களை (B1, B, C1, C, CE, DI, D, DE, G1, G, J) ஒட்டுவதற்கு, இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் வழங்கப்பட்ட, செல்லுபடியாகும் கால அவகாசமுள்ள சாரதி அனுமதிப்பத்திரம் விண்ணப்பதாரர் கட்டாயமாக பெற்றிருக்க வேண்டும்
- குறைந்தபட்சம் 8ஆம் தரம் (Grade 8) கல்வியை முடித்திருக்க வேண்டும். மேலும், எழுதவும் வாசிக்கவும் திறனளவில் நன்கு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- வயதெல்லை 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- உழவு இயந்திரங்கள், சுழல்கலப்பை மற்றும் பெட்டி என்பவற்றின் இணைப்புடன் செலுத்துவதற்குரிய தொழிற்தகமையைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.
- சாரதிகள் குறைந்தது 10 வருடங்கள் சாரதி அனுபவம் கொண்டிருக்க வேண்டும். மேலும், விண்ணப்பதாரர் குறைந்தபட்சம் 3 வருடங்களுக்கு மேலாக அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றியிருத்தல் விரும்பத்தக்கது.
- கடந்த மூன்று வருடங்களில் வீதி விபத்துக்களை சந்திக்காதவராக இருத்தல் வேண்டும்.
- கிராம சேவகரால் வழங்கப்படும் வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் நற்சான்றுப் பத்திரம் இருத்தல் வேண்டும்.
- பூரண உடல் ஆரோக்கியம் கொண்டிருக்க வேண்டும். இதை உறுதிப்படுத்த, மருத்துவ பரிசோதனைச் சான்றிதழ் விண்ணப்பத்துடன் இணைத்தல் அவசியமானது
- எந்தவொரு குற்றச் செயலிலும் ஈடுபடாதவராக இருக்க வேண்டும். இதை உறுதிப்படுத்தும் பொலிஸ் சான்றிதழ், விண்ணப்பதாரரின் வசிக்கும் பிரதேச பொலிஸ் நிலையத்தால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
- தேர்வு செய்யப்பட்ட சாரதிகள், பல்கலைக்கழகத்தின் தேவைக்கேற்ப தேவையேற்படும் நாட்களில் மட்டுமே சேவையில் அமர்த்தப்படுவார்கள்.

தேர்வு செய்யப்பட்ட சாரதிகளது சேவைக்கால ஒப்பந்தம் ஒரு (01) ஆண்டுக்காலமாக இருக்கும். மேலும் செயற்றிறன் மதிப்பீட்டுக்காலம் நாற்பத்து ஐந்து (45) நாட்கள் வரையிலானதாக இருக்கும்.

முழுமையான விண்ணப்பப்பத்திரத்தை தமிழ் மொழியில் பெறுவதற்காக, சேவைக்கட்டணமாக ரூ.500/- (02.06.2025) முன்னர்) நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் மக்கள் வங்கி கணக்கு (97000009000387) இலக்கத்திற்கு வைப்புச் செய்ய வேண்டும். அல்லது, பல்கலைக்கழக காசாளர் அலுவலகத்தில் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து, சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பொது நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொள்ளமுடியும்.

விண்ணப்பதாரர், தேவையான ஆவணங்களை உறுதிப்படுத்திய பிரதி (Certified copy) இணைத்து, விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

பூரணமாக நிரப்பப்பட்ட விண்ணப்பம் மற்றும் (உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களின் நகல்) அனைத்தும் ஒன்றாக பொதியிட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அழைப்பின் பேரில் (On-call) சாரதிகளை பதிவு செய்தல் - 2025" எனத் தலைப்பிட்டு, பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ.இல.-57, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத்தபால் மூலம் 06.06.2025க்கு முன் கிடைக்க கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

**"பூரணப்படுத்தப்படாத அல்லது காலதாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்."**

மேலதிக தகவல்களுக்கு சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பொது நிர்வாகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் – Tele: 021 2226517, Fax:- 021 2226517.

பதிவாளர்



## அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக விளையாட்டுப் பேரவையினால் இன்று (24.05.2025) அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த சீட்டிழுப்பு (28.05.2025) ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.
இடம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபம்
நேரம் - மு.ப 10.00

விளையாட்டுப் பேரவை பிரதேச செயலகம் சங்கானை


## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 12 . 1949



மறைவு 22 . 05 . 2025

### சிவபாலசிங்கம் பேரின்பநாயகி

யாழ் வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிவபாலசிங்கம் பேரின்பநாயகி கடந்த (22.05.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை-கண்மணி தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற வீரசிங்கம்-இராசபூபதி தம்பதியின் அன்பு மருமகளும் சிவபாலசிங்கம் (சிவம்) அவர்களின் அன்பு மனைவியும் மதிபாலசிங்கம் (பெரியதம்பி), பத்மினி (பாமா), ஜெயவீரசிங்கம் (இத்தாலி), கார்த்திகேயன் (ஈசன்-இத்தாலி), கேமலலிதா, விஜிதா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் மலைக்குமாரி, தேவகுமார், சிவறமணி, குமரேஸ்வரி (இத்தாலி), மனோரதன், ரகுகரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும் கௌரிதாஸ் - மயூரிகா, பிரணவன் - புவிகா, கீர்த்திகா, மதுசன் - டக்சிகா, மிதுசன், டனுசிகா, ஜதுசன், ஜிதுசன், சஜிகா, ஜெய்சிங்கம், வர்ணிகா, கபீஷன், காருண்யா, சஞ்சிகா, அட்சிகா, மதுசிகா, சதீர்சன், அரிஸ்கா ஆகீயோரின் பாசமிகு பேர்த்தியும் சர்வின், மஹிஷா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (25.05.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகணக்கிரியைக்காக விளா-வெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

பூம்பத்தை வீதி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு

தகவல்:
குடும்பத்தினர்
077 101 0558

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கை இளங்கோ கழகம்
### புலமை ஒலி - 2025
### சிலப்பதிகார விழா

**கலைஞர் கந்தையா வடிவேலு அரங்கு**
**24.05.2025 சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணி**

சண்முகநாதன் சுகந்தன் அவர்களால் நிறுவப்பட்ட திருமதி இரத்தினமணி சண்முகநாதன் ஞாபகார்த்த கலைப்பணிக்கான உயர்விருது பெறுபவர் **முத்துக்குமாரு கோபாலகிருஸ்ணன் (இசைவாணர் கண்ணன்)**

பொன்னையா செல்வகிருஷ்ணன் அவர்களால் நிறுவப்பட்ட சமயப்பணிக்கான உயர்விருது பெறுபவர் **காலாபூஷணம் சிதம்பரப்பிள்ளை பசுபதி**

பரா.றமேஸ் அவர்களால் நிறுவப்பட்ட திருமதி. பரமேஸ்வரி பரராஜசிங்கம் ஞாபகார்த்த சொல் வன்மைக்கான உயர் விருது பெறுபவர் **வலம்புரி ந. விஜயசுந்தரம்**

**வரவேற்பு நடனம்**
ரா.லதாங்கி, கி.இலக்கியா (நெறியாள்கை, செல்வி.ச.கீர்த்தனா)

**மங்கல விளக்கேற்றல்**
திரு. திருமதி செல்வகிருஷ்ணன் சாந்தலட்சுமி தம்பதிகள்
(உரிமையாளர், ஸ்ரீகுமரன் நகைமாளிகை, நெல்லியடி)
திரு.திருமதி.செல்வகுமார் ஜெயந்தி தம்பதிகள்

**கடவுள் வாழ்த்து**
திரு.மா.கலைச்செல்வன்

**கழகக்கீதம்**

**வரவேற்புரை**
திரு.க.கஜந்தன்

**தலைமையுரை**
கௌரவ நா.வேதநாயகன் (ஆளுநர், வடமாகாணம்)

**தொடக்கவுரை**
திரு.சி.சத்தியசீலன் (பிரதேச செயலர், பருத்தித்துறை)

**நன்றியுரை**
செல்வன் ஜெ.ஜொய்சன்

**கவியரங்கு**
**"பழசை மறந்த பழசுகள்"**
நடுவர் : சிலம்பிசை கோ.கோகிலரதன்
ஆச்சி - சி. வினோஜிதன்
அப்பு - அ. அபிசா
வாத்திக்கிழவன் - கு.கௌரிபாலன்
பூசாரி ஐயா - ச.சுகர்ணன்

**கதாப்பிரசங்கம்**
**"பாண்டியன் பாவை"**
ஆற்றுபவர் : வாமதேவ சிவசதீபன்

**இலக்கிய ஆணைக்குழு**
"நீதியை நிலைநாட்டி தியாகம் செய்தவர் என்ற பெருமைக்குரியவர்"
ஆணையாளர் : கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

**தசரதனே !** செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன், வேல் நந்தகுமார்

**பாண்டியன் நெடுஞ்செழியனே !** பேராசான் ஐ.கதிர்காமசேகரன், ம.கோசலை

**மனுநீதிகண்ட சோழனே !** பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன், பரா.ரமேஸ்

**விளம்பர அனுசரணை**
**அறிவியற் கல்லூரி 1ம் கட்டை பருத்தித்துறை**



## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் உடுவில் டச்சு வீதியில்**
**8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- உடுவில் மகளிர் கல்லூரி அருகாமையில் 150m
- சிறந்த சூழல்
- நல்ல தண்ணீர்
- காணியினுள் பழையவீடு ஒன்று உள்ளது.
- மருதனார் மடம் சந்தை 1Km
- தரகர் தேவையில்லை
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**077 711 5438, 077 327 6462**

(CS/68080) J-1



## காணி விற்பனைக்கு

**யாழ் சுண்டுக்குளி மோரிஸ் ஒழுங்கையில் புதிதாக பிரிக்கப்பட்ட காணித் துண்டுகள்**

- கொழும்புத்துறை சாலைக்கு மிக அருகில்
- சிறந்த சூழல்
- அகலமான சாலை - 15 அடி & 20 அடி
- UDA அங்கீகரிக்கப்பட்டது
- உடனடி கட்டிடம் சாத்தியம்
- 1.4 பரப்பு X 6* துண்டுகள் (1ப 7கு)
- 1.33 பரப்பு X 2* துண்டுகள் (1ப 6கு)
- ஸ்ட்ரீன்லைன் சான்றிதழ்
- உரிமைச் சான்றிதழ்
- கையலிக்கபடாமைக்கான நற்சாட்சி சான்றிதழ்
- மின் இணைப்புக்கான அணுகல்

**சில துண்டுகள் ஏற்கனவே விற்கப்பட்டுள்ளன.**
**தரகர்கள் தேவையில்லை.**

தொடர்புகளுக்கு:
**077 711 5438, 076 156 2983**



## வகுப்புக்கள்

தரம் 5 வரையான மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளை பெறக்கூடிய வகையில் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **077 311 6202**
**077 843 9978**

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hard ware) நிறுவனங்களுக்காக வேலை வாய்ப்பு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொ.இல :- 077 494 9683
076 151 7481

## காணி விற்பனைக்கு

உசன் கஜகேணி பிள்ளையார் கோவில் வீதி, தொந்தியா வேட்டையில் பயன் தரும் தென்னை மரங்களுடன் காணி விற்பனைக்கு உண்டு.

(CR/0066) J-1

**076 072 0341**

## விற்பனைக்குண்டு

ஆலய திருவிழாவினை முன்னிட்டு சுய தொழில் செய்ய முயற்சிக்கின்றவர்களுக்காக சமுத்திரா ரேடர்ஸ் நிறுவனத்தினால் விசேட விலைக்கழிவுகளுடன் சோளம் பொரி, தும்பு முட்டாஸ் தயாரிக்கும் இயந்திரங்கள் மற்றும் ஜெனெரேட்டர் விற்பனை செய்யப்படுகின்றன.

தொடர்பு: **077 494 9683**

(CS/30129) (A) D*


## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு

**வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய உற்சவ கால**
**(2025.06.09 -2025.06.10)**
**வாகனத்தரிப்பிடங்களை குத்தகைக்கு விடுவதற்கான**
**பகிரங்க மீள் ஏல அறிவித்தல் - 2025**

**ஏலம் கூறப்படும் இடம் : முள்ளியவளை உப அலுவலகம், கரைதுறைப்பற்று பிரதேசசபை**
**ஏலம் கூறப்படும் நாள் : 03.06.2025 செவ்வாய் முற்பகல் 10.30 மணி**

வாகனத்தரிப்பிட ஏல விபரம்

| தொ .இல | வாகன வகை | நாளொன்றுக்கு அறவிடவேண்டிய தொகை | ஆகக் குறைந்த ஏலம் கூறும் தொகை | செலுத்த வேண்டிய பிணைப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | துவிச்சக்கர வண்டி<br>மோட்டார் சைக்கிள் | 50.00<br>100.00 | 418,950.00 | 42,000.00 |
| 02 | முச்சக்கர வண்டி | 150.00 | | |
| 03 | கார் | 200.00 | | |
| 04. | ஏனைய மோட்டார் வண்டி பஸ்,பார ஊர்தி | 300.00 | | |


**ஏலத்தில் பங்குபற்றுவதற்கான நியந்தனைகள்**

1. ஏலத்தில் பங்குபற்றுவோர் மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 2000.00 இனை செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். (குறித்த தினத்தில், குறித்த இடத்தில் மு.ப 8.30 தொடக்கம் 10.00 மணி வரை பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளலாம்)
2. 2025/06/09,10 ஆம் திகதிகளில் மட்டுமே ஆலய சுற்றாடலில் சபையால் இனங்காட்டப்படும் இடங்களில் வாகனத்தரிப்பிடங்கள் அமைத்து முடிக்கப்படல் வேண்டும்.
3. சபையில் தவறுனர் பட்டியலில் உள்ளவர்கள் ஏலத்தில் பங்குபற்ற தகுதியற்றவராவார்.
4. வாகனத்தரிப்பிடத்திலிருந்து வாகனங்கள் ஏதேனும் தொலைந்தால் ஏலத்தில் எடுப்பவரே அதற்கு பொறுப்பாளியாவார்.
5. ஏலத்தில் தெரிவுசெய்யப்படுவோராலேயே வாகனத்தரிப்பிடத்திற்கான வெளிச்சமூட்டல், பாதுகாப்பு வேலி மற்றும் காணித்துப்பரவு என்பன மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. ஏலத்தில் தெரிவுசெய்யப்படுவோராலேயே வாகனத்தரிப்பிடத்திற்கான தரிப்பிட கட்டணங்களுக்கான பற்றுச்சீட்டுக்களை தமது செலவிலேயே அச்சிடல் வேண்டும் என்பதுடன் பற்றுச்சீட்டுக்களின் அடிக்கட்டையினை சபையிடம் ஒப்படைத்தல் வேண்டும்.
7. ஏலத்தில் தெரிவுசெய்யப்படுவோர் ஏலத்தொகையினை குறித்தஇடத்திலேயே செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்று பிற்பகல் 03.30 மணிக்கு முன்பாக ரூபா 25.00 முத்திரையுடன் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளித்து உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும்.
8. ஏலத்தில் பங்குபற்றுவோர் கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பதென்பதை உறுதிப்படுத்துவதற்கு, கிராமசேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதியையும் வதிவிடச்சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை,**
**முல்லைத்தீவு.**
**24.05.2025**

## மரண அறிவித்தல்

மலர்வு
21 . 03 . 1929



இறப்பு
12 . 05 . 2025

### செல்வச்சந்திரன் சின்னத்துரை

**(இளைப்பாறிய உதவி அதிபர் - யாழ். கம்பர்மலை வித்தியாலயம், கொம்மந்தறை.)**

யாழ். உடுப்பிட்டி வடக்கு கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வச்சந்திரன் சின்னத்துரை அவர்கள் (12-05-2025) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லமாணிக்கம் மற்றும் துரைராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜலட்சுமி, ருக்குமணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், செல்வேஸ்வரன், ஸ்ரீதர், காலஞ்சென்ற சத்தியநாதன் மற்றும் சத்தியதேவி, சச்சிதானந்தன், சசிகலாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கதாநாயகி, சாந்தா, காலஞ்சென்ற சிவநேசன் மற்றும் உஷா, நந்தசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலானி, மரியா பிரகாசினி, மரின் பிரகாஷ், சிந்து-வினோத், மணியரசன், நித்திலன், நயந்தன், கஜனி, ஜீவனா, கவிதன் ஆகியோரின் பாசமிகு பேரனும், சிவின், டிவினா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார். இறுதிக்கிரியைகள் Sunday, 25 May 2025 8:00 AM - 10:00 AM Colfeian Grounds Ltd. (Horn Park), 76C Eltham Rd, London SE12 8UE, United Kingdom, தகனக்கிரியைகள் Sunday, 25 May 2025 11:00 AM - 12:00 PM, Hither Green Crematorium chapel Verdant Ln, London SE6 1TP, United Kingdom நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible] (மகன்)
[illegible]8652

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசித்திபெற்ற இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் மூன்றாம் நாள் மாலை உற்சவத்தில் விநாயகப் பெருமான், வள்ளி தெய்வயானை சமேத முருகப் பெருமான் சகிதம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய முத்துச் சப்பரத்தில் பவனி வந்தார். (ச-66)



## புளி சரிவு உப்பு உயர்வு

யாழ். குடாநாட்டில் பழப்புளியின் விலை திடீரெனக் குறைந்துள்ளது. கடந்த வாரத்தில் கிலோ ஆயிரத்து 400 ரூபாவாக விற்கப்பட்ட புளி தற்போது கிலோ 900 ரூபாவாக சரிந்துள்ளது.
அதேவேளை உப்பின் விலை அதிகரித்தே விற்கப்படுகிறது. உப்புக்கு ஏற்பட்ட பற்றாக்குறையால் அவற்றின் விலை கிலோ 320 ரூபாவாக அதிகரித்துள்ளது. (ச-25,17)

## புலிகளின்...

அதனால்தான் கனடாவில் 'தமிழர் இனவழிப்பு நினைவகம்' அமைக்கப்பட்டுள்ளது - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
புலிப் பயங்கரவாதிகளுடன்தான் நாம் போர் செய்தோம். பயங்கரவாதிகளுக்கு எதிரான இந்தப் போர் எப்படி இனவாதமாகும்? எமது புலனாய்வுப்பிரிவில் முஸ்லிம் அதிகாரிகள் உள்ளனர். விமானப் படையில் தமிழ் அதிகாரிகள் இருக்கின்றனர். போரை முடித்த பிறகு பொலிஸ் மற்றும் இராணுவத்துக்கு தமிழ் இளைஞர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர். நாம் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுடன் போரிடவில்லை. புலிகளுடன்தான் சமரிட்டோம். ஆனால் தற்போதைய அரசாங்கம் ஒட்டுமொத்த தமிழர்களையும் புலிகளுக்கு சமனானவர்களாகப் பார்ப்பதற்கு முற்படுகின்றது. இது தவறு. இந்த விடயத்தில்தான் இனவாதம் உள்ளது.
உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வடக்கில் இருந்து கிடைக்கப்பெற்ற பெறுபேறு தொடர்பில் ஜனாதிபதி ஆழமாக ஆராய வேண்டும். வீதிகளைத் திறந்தார்கள், காணிகளை கையளித்தார்கள், ராஜபக்சக்களால் களவாடப்பட்டது எனக் கூறப்படும் தங்கத்தைக்கூட கடைசி நேரத்தில் ஒப்படைத்தார்கள். இவ்வாறு வழங்க வேண்டிய அனைத்தையும் வழங்கினார்கள். இறுதியில் தேர்தல் முடிவு எவ்வாறு அமைந்தது? ஆக, தமது பயணம் தவறு என்பதை ஜனாதிபதி உணரவேண்டும்.
கருத்தியல் ரீதியில் பயங்கரவாதிகள் இன்னும் தோற்கடிக்கப்படவில்லை. அதனால்தான் கனடாவில் 'தமிழர் இனவழிப்பு நினைவகம்' அமைக்கப்பட்டுள்ளது. கனடாவில் புலம்பெயர்ந்த புலிகள் உள்ளனர். எனவே, இந்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.
தமிழ் மக்களினதும், புலிகளினதும் அபிலாஷைகள் வெவ்வேறானவை என்பதை புரிந்துகொள்ளவேண்டும். இதனைப் புரிந்துகொள்ளமுடியாததால் தான் ஆறு மாத காலப்பகுதிக்குள்ளேயே வடக்கில் ஆளுங்கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டது - என்றார். (அ-ம-44-75)

## காணிகளைக்...

வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் காணி உரிமைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக, வடக்கு - கிழக்கைச் சேர்ந்த அரசியற்கட்சிகளுக்கும், பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.
இதன்போதே, காணிகளுக்கு உரிமைகளைக் கோருவது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் காணிகளை அபகரிக்கும் நோக்கத்தைக் கொண்டது அல்ல என்றும், மாறாக மக்களின் காணிகளை சரியாகவும் முறையாகவும் வரையறை செய்து அவற்றை மக்களுக்கே ஒப்படைக்கும் வகையிலான திட்டமே என்றும் பிரதமர் ஹரிணி கூறியுள்ளார்.
இதன்போது, 'இதுவரை காலமும் வடக்கு மற்றும் கிழக்கில் நில உரிமைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னைய அரசாங்கங்கள் மேற்கொண்ட திட்டங்கள் குறித்து பொதுமக்கள் மத்தியில் சந்தேகங்கள் எழுந்துள்ளன. காணிகளை சொந்தமாக வைத்திருப்பவர்களிடம் தங்கள் உரிமையை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது' என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். இதற்கு மக்களின் நம்பிக்கையை வெல்லும் முறையான வேலைத்திட்டம் தேவை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
இதையடுத்து, 'பொதுமக்களின் சந்தேகங்களைப் போக்க முறையான வழிமுறையை அறிமுகப்படுத்தி, சட்டபூர்வ உறுதிப்படுத்தல்களுடன் மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படவேண்டும் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. மக்களின் நிலங்களை கையகப்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு இம்மியளவுகூட நோக்கம் கிடையாது' என்றும் பிரதமர் ஹரிணி கூறியுள்ளார். அனைவரும் ஏற்கக்கூடிய பொறிமுறையொன்று இந்த விடயத்தில் உருவாக்கப்படும் என்றும் பிரதமர் ஹரிணி சுட்டிக்காட்டியுள்ளார். (அ-ம-26)

## கனடாவின்...

முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை இடம்பெற்று ஒன்றரைத் தசாப்தகாலம் கடந்திருக்கின்றது. பதினாறு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. தமக்கு மேற்கொள்ளப்பட்ட அநீதிக்கு நீதிகிடைக்கவேண்டும், தமிழினப் படுகொலையை மேற்கொண்டவர்களுக்கும், துணை நின்றவர்களுக்கும் உரிய தண்டனைகள் வழங்கப்படவேண்டும் என்பதே எமது உறவுகளின் எதிர்பார்ப்பாகவுள்ளது. இருப்பினும் நீதி கிடைக்கவில்லை.
இத்தகைய சூழலில்தான் கனடாவின் பிரம்டன் நகரத்தில் தமிழினப் படுகொலையை நினைவுகூரும் வகையில் நினைவுத் தூபியொன்று அமைக்கப்பட்டுள்ளது. கனடாவின் இந்தச் செயற்பாடும், எம்மில் அவர்கள் காட்டும் அன்பும் அக்கறையும் எமக்குப் புதிய தெம்பைத் தருகின்றது. கனேடிய தேசம் நீதிக்காக ஏங்கும் மக்களுக்கு ஒரு நம்பிக்கையாக மாறியுள்ளது.
முள்ளிவாய்க்கால் படுகொலைகளை முன்னிட்டு, ஈழத்தமிழினத்துக்கு ஆறுதல் கூறிய கனேடியப் பிரதமர் மார்க் கார்னிக்கும், பிரம்டன் மேயர் பற்றிக் பிரவுணுக்கும், எங்களை ஆதரிக்கும் ஒவ்வொரு கனேடியத் தலைமைகளுக்கும் இலங்கை நாடாளுமன்றத்தில் நின்று நன்றியைத் தெரிவிக்கின்றேன் - என்றார். (அ-ம-26)

## அரச...

ஒருவரைக் கைதுசெய்வதற்கு முயன்றபோது, பொலிஸாரின் கடமைக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டார் என்று அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (அ-ம-44)

## தெற்காசியாவுக்குள்...

அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் கடந்த ஒரு வாரத்துக்குள் 450 இற்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், தடுப்பூசித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம)

## 'தங்கத்'...

துப்பாக்கியொன்று கடந்த செவ்வாய்கிழமை கைப்பற்றப்பட்டது. இந்த விவகாரத்தில் ஏற்கனவே இரண்டு பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே, துமிந்த திஸாநாயக்க நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (அ-ம-44)

## மின்சாரம்...

உயிரிழந்தவராவார். பந்தல் போடுவதற்காக கதியால் வெட்டியபோது, அந்தக் கதியால் பிரதான மின்மார்க்கத்தில் வீழ்ந்து குறித்த நபரைத் தாக்கியுள்ளது. இதையடுத்தே அவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.
வீதியால் சென்ற ஒருவர், அவர் உயிரிழந்து கிடப்பதை அவதானித்து, வீட்டாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். இதையடுத்து சடலம் மீட்கப்பட்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது.
இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26-100)

## யாழ்ப்பாணத்தின்...

வளர்ச்சி மற்றும் முழுமையான வறுமை ஒழிப்பில் இலங்கைக்கான பாடங்கள்' எனும் தலைப்பில் நேற்றுக் கருத்தரங்கொன்று இடம்பெற்றது. இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நான் தமிழ் படித்தேன். தமிழ் மொழி ஓர் அழகான மொழி. யாழ்ப்பாணம் ஓர் அழகான இடம். 2017ஆம் ஆண்டில் நான் இங்கு வந்தபோது இலங்கையில் 3 ஜி, 4 ஜி அலைவரிசை காணப்பட்டது. ஆனால், சீனாவில் அதைவிடக் குறைந்த இயலுமையே காணப்பட்டது. ஆனால், இன்று சீனாவில் 6 ஜி அலைவரிசை உருவாக்கப்பட்டுள்ளது. இது சீனாவின் பொருளாதாரத்தில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்துகின்றது.
நான் கல்விகற்ற காலத்தில், 600 கிலோமீற்றருக்கும் மேற்பட்ட தூரத்தை 32 மணிநேரங்கள் பயணித்தே அடைய வேண்டியிருந்தது. ஆனால், இன்று இரண்டரை மணிநேரத்தில் அந்த இலக்கை அடைந்துவிடுகின்றனர். போக்குவரத்தும், தொழில்நுட்பமும் அங்கு மேம்படுத்தப்பட்டுள்ளன. மாகாண ரீதியான வேற்றுமைகளை விடுத்து பொருளாதாரரீதியாக ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலமே எம்மால் பொருளாதார ரீதியாக முன்னேறமுடிந் தது - என்றார்.
சீனப் பேராசிரியர் தமிழிலும் உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## போதை...

செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் 18 மற்றும் 24 வயதுடையவர்கள் என்றும், அவர்கள் மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். அவர்களிடம் இருந்து 270 போதைமாத்திரைகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (அ-ம-26)

## வவுனியாவில்...

மீட்கப்பட்டுள்ளன. வவுனியா மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு போதைப்பொருள் தொடர்பில் கிடைத்த இரகசியத்தகவலையடுத்து, மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே மேற்படி பொருள்கள் அந்த வீட்டில் இருந்து மீட்கப்பட்டன.
அந்த வீட்டின் உரிமையாளர் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்தவர் என்பதும், அவரால்தான் குறித்த பொருள்கள் மறைத்துவைக்கப்பட்டுள்ளன என்பதும் தெரியவந்தது. இதையடுத்து அவரும், பிறிதொரு நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-110-18)

## இனப்...

சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் டொம் பிளெச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.
ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
காஸாவில் இடம்பெறும் மிகக்கொடிய மனித உரிமை மீறல்கள் இலங்கை உட்பட பல நாடுகளில் நிகழ்ந்த சம்பவங்களை நினைவுபடுத்துகின்றன. இலங்கை உட்பட நாடுகள் சிலவற்றில் இடம்பெற்ற அட்டூழியங்களைப் போன்றே தற்போது காஸாவிலும் இடம்பெற்றுவருகின்றது. ஆனால், இலங்கை விடயத்திலும், மியான்மார் விடயத்திலும் ஐக்கிய நாடுகள் சபை பாராமுகமாய் இருந்ததைப் போன்று காஸா விடயத்தில் இருக்கக் கூடாது. காஸாவில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை விரைவாகத் தடுக்க வேண்டும்.
மியன்மார், இலங்கை, ருவாண்டா போன்ற நாடுகளில் இழைக்கப்பட்ட மீறல்களின் அளவு குறித்து ஐக்கிய நாடுகள் சபை பேசத் தவறியுள்ளது. கொல்லப்பட்டவர்களுக்கும், மௌனமாக்கப்பட்டவர்களுக்கும் என்ன ஆதாரங்கள் தேவை? எனவே, இஸ்ரேல் மேற்கொள்ளும் இனப்படுகொலைகளை கண்டித்தும் தண்டித்தும் தனது கடந்தகால தவறை ஐக்கிய நாடுகள் சபை சரிசெய்ய வேண்டும் - என்றார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறான முடிவெடுத்து குடும்பத்தலைவர் பலி


யாழ்ப்பாணம், மே 24

தவறான முடிவெடுத்து குடும்பத்தலைவர் உயிரிழந்துள்ளார். சங்கானை பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய குடும்பத்தலைவரே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரிழந்தவராவார். அண்மைக்காலமாக கடும் மன விரக்தியில் இருந்ததாலேயே அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளளார் என்று தெரியவருகின்றது.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-100)

காணிகள் விற்பனைக்கு
கந்தர் மடச்சந்திக்கும் Hindu Ladies College க்கும் இடையில் 1 1/4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
➤ பிரதான வீதியில் இருந்தும் 2 ம் காணி
➤ சுற்றுமதில் ➤ குழாய்க் கிணறு
➤ மொத்தவிலை 27,500,000/=
தரகர் யாரும் தொடர்புகொள்ளவேண்டாம்
077 225 5805 (காணி உரிமையாளர்)

வேலை வாய்ப்பு
முச்சக்கர வண்டி ஓட்டுநருக்கான அனுமதிப்பத்திரம் உள்ள ஆண், பெண் இருபாலருக்குமான உடனடி வேலைவாய்ப்பு (முழுநேரமும்) ஆர்வமுள்ளவர்கள் தங்கள் விபரங்களை WhatsApp ஊடாக பதிவிடவும்.
யாழ் மாவட்டத்தில் வசிப்பவர்கள் மட்டும் விரும்பத்தக்கது.
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்
077 497 2920
WhatsApp: 074 267 8654

மர தளபாட உற்பத்தியாளர்களுக்கு
சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட தச்சுவேலை மெசின் (Wood working Machine) "Lida" ஒறிஜினல் 12" மற்றும் 10" Sliding இணைப்புடன் இப்பொழுது எம்மிடம். இதை ஒத்த போலிகள் தரம் குறைந்த மோட்டாருடன் சந்தையில் ஏமாந்துவிடாதீர்.

"நாங்கள் உங்களோடு"
ஆர்க் .என். கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
Hotline: 071 535 7799 / 071 535 7803

யாழ் நகரின் பிரபல ஆசிரியரின் கற்பித்தலில்
Spoken English
Grammar Classes
by
Mr. K. GANESH
B.A (Pera. OUSL)
கொழும்பில் பல வருடம் கற்பித்த அனுபவ ஆசிரியர்
A/L, O/L, Gr - 10, Gr - 09,
SAT - SUN - 4.30 p.m - 6.00 p.m
பட்டதாரிகள், தொழில் புரிவோர்
SAT - SUN - 6.00 p.m - 7.30 p.m
நாவலர் ஆணைப்பந்தி யாழ்ப்பாணம்
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்
25.05.2025 ஆரம்பம் 4.30 p.m
தொடர்பு: 077 459 8440, 077 766 8725

வேலைவாய்ப்பு
Responsibilities
- Provide support services for ERP users, for daily business operations
- Troubleshoot errors and resolve problems.
- Coordinate with the development team for bug fixes, enhancements, and modifications
- Documenting common issues and solutions.


Requirements
- Strong understanding of accounting principles and practices
- Prior experience in accounting or audit environment
- Priorexperience in a customer-facing role handling ERP support tickets will be added advantage
- Proficiency in English Language
- Part or full qualification in Finance (e.g.: CIMA, ACCA, CA or AAT fully qualified)
- 2+ years of relevant work experience preferred

(Training will be provided)
077 605 3952

# தகுதியாட்டத்தில் விளையாடும் பெங்களூரின் கனவுக்கு ஆப்பு

## ஹைதராபத்திடம் நேற்றுப் படுதோல்வி

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், பெருமளவு ரண்ரேட் வித்தியாசத்தில் பெங்களூரைத் தோற்கடித்தது ஹைதராபாத்.**



முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி இஷான் கிஷானின் அபார ஆட்டத்தால் 6 விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக இஷான் கிஷான் 94 ஓட்டங்களையும், அபிஷேக் சர்மா 34 ஓட்டங்களையும், அங்கிட் வெர்மா 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரொமேரியோ ஷெப்பேர்ட் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூர் அணி ஆரம்ப வீரர்களான கோலியும், பில் ஷால்ட்டும் சிறந்த இன்னிங்ஸை அமைத்துக் கொடுத்தனர். கோலி 43 ஓட்டங்களுடனும், பில் ஷோல்ட் 62 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்த பின்னர், பெங்களூர் அணி பெரும் பின்னடைவை எதிர்கொண்டது. இன்னிங்ஸைத் தொடர்ச்சியாக மேம்படுத்த எவருமில்லை. இதையடுத்து 189 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 42 ஓட்டங்களால் தோல்வியடைந்தது பெங்களூர்.

இந்தத் தோல்வியால் பெங்களூரின் ஓட்டச்சராசரி (ரண்ரேட்) குறைவடைந்ததைத் தொடர்ந்து பஞ்சாப் புள்ளிப் பட்டியலில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது. ஆதலால், பிளேஓப் சுற்றில் முதலாவது தகுதியாட்டத்தில் விளையாடும் வாய்ப்பை பெங்களூர் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. (ம)

# பாதாள உலகக்குழுக்களுடன் அரசியல்வாதிகள் தொடர்பு

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

பாதாள உலக நடவடிக்கைகளுடன் நேரடி அரசியற் தொடர்புகள் உள்ளன என்பதை உளவுத்துறையினர் கண்டுபிடித்துள்ளனர். விசாரணைகளின் பின்னர் அத்தகைய அரசியல்வாதிகளின் பெயர்கள் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நாட்டில் நடக்கும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றினார். அதற்குப் பதிலளிக்கும்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலனாய்வு அறிக்கைகளின்படி பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் முன்னாள் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மற்றும் தற்போதைய மாகாண அரசியல்வாதிகள் சக்தி வாய்ந்த 10 பாதாள உலகக்குழுக்களுடன் நேரடித் தொடர்புகளைப் பேணுகின்றனர்.

பாதாள உலகத்துடனான அரசியற் தொடர்புகள் பாதாள உலக நடவடிக்கைகள் அதிகரிப்பதற்கு பங்களித்துள்ளன என்று புலனாய்வு அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன - என்றார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் இந்தப் பதிலுக்கு, எதிர்க்கட்சியினர் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். அதனால் சபையில் சற்று சலசலப்பு ஏற்பட்டது. (எ-இ)



யாழ்ப்பாணம் றைடர்ஸ் விளையாட்டுக்கழக வீரர்களுக்கு 50ஆயிரம் ரூபா பெறுமதியான உதைபந்தட்டம் மற்றும் கரப்பந்தாட்ட விளையாட்டு உபகரணங்களும், மைதான புனரமைப்புக்காக 2 இலட்சம் ரூபா பணமும் தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழங்கிவைக்கப்பட்டது. (ச-41-22)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.